පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංකය : 79

ආයතනයේ නම -රෙජිස්ට්‍රාර් ජනරාල් දෙපාර්තමේන්තුව

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119(4) යටතේ ගරු ආයතන භාර අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම

பாராளுமன்றவெளியீட்டுத்தொடர்இலக்கம் : 79

நிறுவனத்தின் பெயர் : பதிவாளர் நாயகத் திணைக்களம் பாராளுமன்றத்தின் அரச கணக்குக் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் நிறுவனங்களிற்குப் பொறுப்பான கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.

Parliamentary Series No :79

Name of the Institution – Registrar General's Department

Submission of the Observations of Hon.Minister in charge of the institutions and steps taken with regard to the reports tabled by the Committee on Public Accounts in terms of Standing Order 119(4).

இலங்கைப் பாராளுமன்றத்தின் அரச கணக்குகள் குழுவினால் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட நிலையியற் கட்டளைகள் 119(4) தொடர்பில் அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல் (முதலாவது பகுதி) - 2022 நிதி ஆண்டு

பாராளுமன்ற வெளியீட்டு இலக்கம் 79
திணைக்களம் - பதிவாளர் நாயகம் திணைக்களம்

	அரச கணக்குகள் குழுவினால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் மற்றும் வழிகாட்டல்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்	தற்போதைய முன்னேற்றம்
1	பாவனைப்பொருட்கள் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்ட நிலையில் பேணப்படவில்லை.	பாவனைப்பொருட்கள் பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணுமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.	பாவனைப்பொருட்கள் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுகின்றது.
2	இடர் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்ட நிலையில் பேணப்படவில்லை.	இடர் பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணுமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.	கணக்காய்வுத் திட்டத்தைத் தயாரிப்பதற்கான அடிப்படையாக கொள்வதற்கு முகாமைத்துவ மற்றும் கணக்காய்வுத் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் 2022/2023 ஆண்டுகளுக்கு ஏற்புடையதாக இற்றைப்படுத்தப்பட்டுள்ளது.

3	கணக்காய்வாளரினால் எழுப்பப்பட்ட கணக்காய்வு ஐய வினாக்களுக்கு ஒரு மாதத்திற்குள் பதிலளிக்கப்படவில் லை.	கணக்காய்வு ஐய வினாக்களுக்கு ஏற்புடைய அனைத்து பிரிவுகளிலிருந்தும் தாமதமின்றி தகவல்களைப் பெற்று கணக்காய்வு ஐய வினாக்களுக்கு விடையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	முடியுமான அளவு தாமதம் இன்றி பதில் அளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
4	உள்ளக கணக்காய்வுகளுக்கு ஒரு மாதத்திற்குள் பதில் அளிக்கப்படாத சந்தர்ப்பங்கள் அறிக்கையிடப்பட்டன.	பதவிநிலை உத்தியோகத்தர் கூட்டங்களின் போதும், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கூட்டங்களின் போதும் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களின் போதும்உரிய திகதியில் உள்ளக கணக்காய்வு விசாரணைகளுக்கு ஏற்புடைய காலப்பிரிவுக்குள் பதில் அளிக்குமாறு பிரதான அலுவலகம் உட்பட உப அலுவலக உத்தியோகத்தர்கள் அறிவூட்டப்பட்டுள்ளனர்.	உள்ளக கணக்காய்வு விசாரணைகளுக்கு உரிய திகதியில் பதில் அளிப்பதற்குநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
5	2017.06.26 ஆம் திகதிய இல 1/2017 எனும் சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 7 ஆம் பந்தியின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் மற்றும் அகற்றல்கள் பற்றிய தகவல்ளை கொம்ப்ட்ரோலர் நாயகம் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படவில் லை.	இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை கொம்ட்ரோலர் நாயகத்தின் அலுவலகத்திற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	இற்றைப்படுத்தப்பட்ட தகவல்கள் சமர்ப்பிக்கப்படும்.

6	வருடாந்தபொருள் சுற்றாய்வின் போது கண்டறியப்பட்ட மிகை, குறைபாடு பற்றிய சிபாரிசுகள் உரியகாலத்தில் நடைமுறைப்படுத்தப்படவில்லை.	வருடாந்தபொருள் சுற்றாய்வின் போது கண்டறியப்பட்ட மிகை, குறைபாடு பற்றிய சிபாரிசுகள் உரியகாலத்தில் நடைமுறைப்படுத்துமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவூட்டப்பட்டது.	உரிய காலப் பகுதியில் சிபாரிசுகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.
7	அனைத்து வாகனங்களிலும் அரச இலச்சினை பொறிக்கப்படவில்லை.	அனைத்து வாகனங்களிலும் அரச இலச்சினையைப் பொறிப்பதற்கு துரிதமான நடவடிக்கை எடுப்பதற்கு தேவையான அறிவுறுத்தல்கள்வழங்கப்பட்டுள்ளன.	தற்போது அந்தப் பணிகள் நிறைவடைந்துள்ளன.
8	அனைத்து வாகனங்களுக்கும் லொக் புத்தகங்கள் இற்றைப்படுத்தி பேணப்படவில்லை.	அனைத்து வாகனங்களுக்கும் லொக் புத்தகங்கள் இற்றைப்படுத்தி பேணிவருவதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.	அனைத்து வாகனங்களுக்கும் லொக் புத்தகங்கள் இற்றைப்படுத்தி பேணிவரப்படுகின்றன.
9	விபத்துக்குஉள்ளாகும் அரச வாகனங்கள் தொடர்பில் நி.ஒ. பிரகாரம் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.	விபத்துக்கு உள்ளாகும் அரச வாகனங்கள் தொடர்பில் நி.ஒ. பிரகாரம் உரிய நடவடிக்கைகள் எடுக்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவூட்டப்பட்டுள்ளது.	விபத்துக்கு உள்ளாகும் அரச வாகனங்கள் தொடர்பில் நி.ஒ. பிரகாரம் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.
10	நி.ஒ. 94(1) பிரகாரம் செலவினத் தலைப்புக்கு வழங்கப்பட்டிருந்த ஏற்பாடுகளைப் பயன்படுத்திய பின்னர் வருடத்தின் இறுதியில் எஞ்சிய ஒதுக்கீடுகளைவிட கடப்பாடுகளை ஏற்படுத்திக்கொள்ளல்.	திறைசேரியிலிருந்து போதுமான நிதி ஒதுக்கீடுகளைப் பெற்றுக்கொள்வதற்கு மதிப்பீடுகளைத் தயாரிக்குமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.	திறைசேரியிலிருந்து போதியளவு நிதி ஒதுக்கீடு பற்றாக்குறை காரணமாக இந்த நிலமை தோன்றியுள்ளது.

11	ஒரு வருடத்திற்கும் மேற்பட்ட காலமாக நிலவிவரும் கடன் மீதிகள் காணப்பட்டன.	மாதாந்த நிலுவைத் தொகையை வசூலிக்க உரிய நடவடிக்கைஎடுப்பதற்கும்,கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டத்தில் இதற்கான முன்னேற்றம் குறித்து கலந்துரையாடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	வசூலிக்க முடியுமான கடன் மீதிகள் அறவிடப்படுகின்றன. வசூலிக்கமுடியாத கடன் நிலுவைகளை 2024.05.29 ஆம் திகதிய அ.நி.சு. 01/2024 பிரகாரம் தள்ளுபடி செய்வதற்கான முறையான ஒப்புதலைப் பெறுவதற்கும், ஆண்டு இறுதிக்குள்அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.
12	பொதுவைப்புக் கணக்கில் உள்ள காலதாமதமான வைப்புக்கள் குறித்து, நி.ஒ..571ன் படி எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.	பொது வைப்புக் கணக்கில் உள்ள காலதாமதமான வைப்புக்கள் குறித்து, நி.ஒ..571ன் பிரகாரம் நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.	பொதுவைப்புக் கணக்கில் உள்ள காலதாமதமான வைப்புக்கள் குறித்து, நி.ஒ..571ன் பிரகாரம்நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.
13	நி.ஒ. 371 பிரகாரம் வழங்கப்பட்ட நிமித்த உப கட்டுநிதி தொடர்பில் பணி நிறைவடைந்து ஒருமாத்த்திற்குள் தீர்க்கப்படவில்லை.	திணைக்களத்தின் கீழ் உள்ள அனைத்து அலுவலகங்களுக்கும் உப கட்டுநிதிகள் வழங்கப்படுவதோடு, சம்பந்தப்பட்ட பணிகள் முடிந்து ஒருமாதத்திற்குள் தீர்ப்பதற்கு உரிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.	2024 ஆம் ஆண்டில் உரிய பணி நிறைவடைந்து ஒரு மாத்த்திற்குள் தீர்க்கப்படுகின்றன.

14	அனுமதிக்கப்பட்ட எல்லையைத் தாண்டி ஆளணி ஆட்சேர்க்கப்பட்டுள்ள து.	முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு கோரிக்கைகளை முன்வைக்குமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.	அரச சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட சில அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் இந்த திணைக்களத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளனர் மேலும் அந்த உத்தியோகத்தர்களை திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களுடன் இணைத்து அங்கீகாரம் வழங்குமாறு பொது நிர்வாக அமைச்சினால் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் பகுதி

1	கோரப்பட்ட தகவல்களை வழங்காதது தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகள் மற்றும் இது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான பதிவேடுகள் பராமரிக்கப்படவில்லை.	இந்தப் பதிவேட்டை முறையாக பராமரிக்க உத்தியோகத்தர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.	உரிய பதிவேடு பேணப்படுகின்றது.
2	நிறுவனத்தால் பராமரிக்கப்படும் இணையதளம் பொதுமக்கள் முறைப்பாடுகளையோ அல்லது பாராட்டுக்களையோ பதிவு செய்ய அனுமதிக்கவில்லை.	இதற்குத் தேவையான தொழில்நுட்ப நடவடிக்கைகளை மேற்கொள்வது மற்றும் பொதுமக்கள் முறைப்பாடுகள் அல்லது பாராட்டுகளைப் பதிவு செய்வதற்கான வாய்ப்பை வழங்குதல்.	இணையத்தளம் பொதுமக்களுக்கு விசாரணைகள், புகார்கள், ஆலோசனைகள் மற்றும் பாராட்டுகளைப் பதிவு செய்ய பொருத்தமான தொழில்நுட்ப நடவடிக்கைகளை உள்ளடக்கியுள்ளது. அதன்படி, பொது விசாரணைகள், புகார்கள் மற்றும் பரிந்துரைகளுக்கு ஒரு குறிப்பு (விசாரணை, புகார்கள் மற்றும் பரிந்துரைகள் படிவம்) உள்ளது, இதன் மூலம் பொது குறிப்புகள் மின்னஞ்சல் மூலம் பெறப்படுகின்றன. இந்த வசதி மூன்று மொழிகளிலும் வழங்கப்பட்டுள்ளது.

3	நிறுவனத்தின் பிரஜைகள் பட்டயத்தை செயல்படுத்துவதற்கு மற்றும் கண்காணிப்பதற்கு அல்லது மதிப்பீடு செய்ய எந்த அமைப்பும் இல்லை.	நிறுவனத்தின் பிரஜைகள் பட்டயத்தை செயல்படுத்துவதற்கு மற்றும் கண்காணிப்பதற்கு அல்லது மதிப்பீடு செய்ய முறைமையொன்றைத் தயாரிக்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.	நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.
4	அனைத்து ஆளணியினருக்கும் செயலாற்றுகை ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டு ஒப்பந்தம் செய்யப்படவில்லை.	இது தொடர்பில் உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவூட்டப்பட்டுள்ளது.	நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.
5	நிறுவனத்தின் கணக்குகள் பற்றிய கணக்காய்வின் அபிப்பிராயம், கீழ் மட்டத்தில் / மறுக்கும் மட்டத்தில் / பாதிப்பான மட்டத்தில் காணப்பட்டது.	நிறுவனத்தின் நிதி நடவடிக்கைகளின் கணக்காய்வு அபிப்பிராயத்தை சாதகமான மட்டத்தை அடைந்துகொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.	நிறுவனத்தின் நிதி நடவடிக்கைகளின் கணக்காய்வு அபிப்பிராயத்தை சாதகமான மட்டத்தை அடைந்து கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
6	அனைத்து உத்தியோகத்தர்களும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பிரகடனத்தை சமர்ப்பிக்கவில்லை.	சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பிரகடனங்களை சமர்ப்பிக்காத உத்தியோகத்தர்கள் தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.	சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பிரகடனத்தை வழங்கியுள்ள உத்தியோகத்தர்கள் மற்றும் வழங்காத உத்தியோகத்தர்களின் பட்டியல் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை விசாரணை செய்யும் ஆணைக்குழுவுக்கு 2024.07.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

W.R.A.N.S. Wijayasinghe
Registrar General
Registrar General's Department
No. 234/A3, "Denzil Kobbekaduwa Mawatha
Koswatta, Battaramulla

R.T.K. Welivitage
Chief Accountant
Registrar General's Department
Battaramulla

செயலாளரின் பரிந்துரை

பதிவாளர் நாயகத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதுடன் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகளுக்கு தனிப்பட்ட கவனம் செலுத்தி அவற்றை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு பதிவாளர் நாயகத்திற்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது.

பிரதீப் யசரத்ன

செயலாளர்

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

Pradeep Yasarathna
Secretary
Ministry of Public Administration, Home Affairs,
Provincial Councils & Local Government
(Home Affairs Division)
"NILA MEDURA" Elvitigala Mawatha, Colombo 05

அமைச்சரின் பரிந்துரைகள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

அரசாங்க கணக்குக் குழு மூலம் பதிவாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டிருக்கும் ஆலோசனைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தி, அக்குறைபாடுகள் மீண்டும் ஏற்படாமல் இருக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க அமைச்சின் செயலாளருக்கு நான் அறிவுறுத்தியுள்ளதுடன், அச்செயற்பாடுகள் மூலம் 2024 ஆம் ஆண்டிற்குள் அதன் அடைவ மட்டத்திலிருந்து உயர் மட்டத்தை எட்ட முடியும் என்று எதிர்பார்க்கின்றேன்.

கௌரவ தினேஸ் குணவர்தன (பா.உ.)

பிரதம அமைச்சர் மற்றும்

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்